செ.வெ.எண்.10 நாள்: 06.02.2017

**வடலூர் இராமலிங்கர் நினைவு நாளை முன்னிட்டு,**
**அனைத்து இறைச்சிக் கூடங்களும் மூடப்பட வேண்டும்**
**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவிப்பு**

-----

வருகின்ற 09.02.2017 (வியாழக்கிழமை) அன்று வடலூர் இராமலிங்கர் நினைவு நாளை முன்னிட்டு, அரசு ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை (கால்நடை மருத்துவப்பிரிவு) கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து இறைச்சிக் கூடங்களும் மூடப்படுகின்றன. இதேபோல், ஆடு, மாடு, இதர இறைச்சி விற்பவர்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களில் பதப்படுத்திய இறைச்சி விற்பனை செய்யவும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசு ஆணையின்படி கண்டிப்பாக 09.02.2017 (வியாழக்கிழமை) அன்று அனைத்து இறைச்சிக் கூடங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களில் பதப்படுத்திய இறைச்சி விற்பனை செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. அரசு ஆணையினை செயல்படுத்த வியாபாரிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**